வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.2210/ஆ3/2022 நாள் 17.07.2023

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் – Pre Matric and Post Matric – கல்வி உதவித்தொகை திட்டம் 2022 – 2023 ஆம் கல்வி ஆண்டில் பயின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஆதார் எண் அடிப்படையில் கல்வி உதவித்தொகைபெறுதல் – தொடர்பாக

பார்வை சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) (பொ) செயல்முறைகள் ந.க.எண்.028972/எம்/இ4/2023 நாள் 11.07.2023

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் பயின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு Pre-Matric and Post-Matric கல்வி உதவித்தொகை ஆதார் எண் அடிப்படையில் நேரடியாக மாணவர்களுக்கு சென்றடையும் பொருட்டு மாணவர்களின் வங்கி கணக்குடன் ஆதார் எண்ணினை உடனடியாக இணைத்தல் வேண்டும்.

மேலும் மாணவர்களின் ஆதார் எண்ணை வங்கி கணக்குடன் இணைக்காத பள்ளி தலைமை ஆசிரியர்கள் உடனடியாக ஏற்கனவே சார்ந்த பள்ளிகளுக்கு என குறிப்பிடப்பட்டுள்ள Postman தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு உடனடியாக ஆதார் எண்ணை பதிவேற்றம் செய்ய அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 2022 – 2023 ஆம் கல்வி ஆண்டில் பயின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலமாணவர்களுக்கு (Pre-Matric and Post-Matric) கல்வி உதவித் தொகை எந்த ஒரு மாணவருக்கும் விடுபடாமல் அனைத்து மாணவர்களுக்கும் பெற்று வழங்குதல் வேண்டும். சார்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படவில்லையென பின்னர் தெரியவந்தால் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியரே முழுப் பொறுப்பு ஏற்க நேரிடும் என திட்டவட்டமாக மீள தெரிவிக்கப்படுகிறது.

17/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

14/07/23

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள்,
அரசு / அரசு உதவிபெறும் / மெட்ரிக் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

Scanned with CamScanner